**செய்தி வெளியீடு எண்: 936** **நாள்: 18.12.2018**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் "சென்னையில் திருவையாறு" 14–வது ஆண்டு இசை துவக்க விழாவில் ஆற்றிய உரை – 18.12.2018**

**மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,**

இந்த இனிய விழாவிற்கு தலைமையேற்கும்
இந்திய மக்கள் முன்னேற்ற கழகத்தின் தலைவர்,
டாக்டர் தி.தேவநாதன் யாதவ் அவர்களே!

முன்னிலை வகிக்கின்ற
ஜீ தமிழ் தொலைக்காட்சியின் தென்னிந்திய தலைவர்,
திரு. சிஜீ பிரபாகரன் அவர்களே !

வரவேற்புரை நிகழ்த்திய
லஷ்மண் ஸ்ருதியின் ஆலோசகர்
திரு. ஆர்.எஸ்.மணி அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
நாடாளுமன்ற உறுப்பினர்கள் அருமைச் சகோதரர்கள்
திரு. எஸ்.ஆர்.விஜயகுமார் அவர்களே !
மருத்துவர் ஜெ.ஜெயவர்தன் அவர்களே !

சட்டப்பேரவை உறுப்பினர்கள்
தி.நகர். திரு. பி.சத்யா அவர்களே !
திரு. விருகை வி.என்.ரவி அவர்களே !

மற்றும்

மெல்லிசை மன்னரின்
திருவுருவ மெழுகுச் சிலையை திறந்து வைத்து
இந்நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற பத்மபூஷண் திருமதி. சரோஜாதேவி அவர்களே!

இசை ஆழ்வார் தங்க பதக்க விருதினை பெற்ற
பத்மஸ்ரீ ஏ.கே.பழனிவேலு அவர்களே!

நல்லி சில்க்ஸ் நிர்வாக இயக்குநர்
மரியாதைக்குரிய முனைவர் நல்லி குப்புசாமி அவர்களே !

வேல்ஸ் பல்கலைக் கழகத்தின் வேந்தர்
மரியாதைக்குரிய சகோதரர் முனைவர் ஐசரி கணேஷ் அவர்களே !
போத்தீஸ் நிறுவன தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
மரியாதைக்குரிய திரு. எஸ்.ரமேஷ் அவர்களே!
மற்றும் மேடையிலே வீற்றிருக்கின்ற முக்கியப் பிரமுகர்களே!
விழா அமைப்பாளர்
இயக்குநர் லஷ்மண் ஸ்ருதி மியூசிக்கல்ஸ்
திரு. வே.லஷ்மணன் அவர்களே!
நன்றியுரை ஆற்ற இருக்கின்ற
திரு சரவணன் அவர்களே!

பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே,
இந்நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே, ரசிக நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண்
நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரங்கில் உள்ள சங்கீத நாட்டிய கலைஞர்களுக்கும், ரசிகர்களுக்கும், பொது மக்களுக்கும் அன்பு வணக்கம்.

மெல்லிசை மேடைக் கச்சேரிகளில் அனைவரும் அறிந்த ‘லஷ்மன் ஸ்ருதி’ இசைக் குழுவினர் சார்பாக நடத்தப்படுகின்ற ‘‘சென்னையில் திருவையாறு’’ விழாவினை துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பன்னெடுங்காலமாக தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவையாறில், உலகெங்கிலும் இருந்து வருகின்ற கர்நாடக இசைக் கலைஞர்கள் ஒன்றுகூடி நடத்துகின்ற ‘‘தியாகராஜர் ஆராதனை விழா’’வை சென்னை மக்களும் கண்டு ரசிக்கின்ற வகையில் காமராசர் அரங்கத்தில் கடந்த 13 ஆண்டுகளாக மிகச் சீறும் சிறப்புமாக ‘லஷ்மண் ஸ்ருதி’ குழுவினர் நடத்தி வருவது பாராட்டுக்குரியது.

மார்கழி மாத இசை விழாக்களில் தனித்துவம் பெற்ற சென்னை மாநகருக்கும், தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் சிறப்பு சேர்க்கும் விழாவாக ‘சென்னையில் திருவையாறு’ நிகழ்ச்சி விளங்குகிறது. தொன்மையான கலைகளிலும், கலாச்சாரத்திலும், நாகரிகத்திலும் உலகத்திற்கே முன்னோடியாக விளங்கும் நமது இந்திய தேசத்தில் எண்ணற்ற அரிய கலைகள் தோன்றி மக்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கின்றன. அவ்வாறாக தோன்றிய அருங் கலைகளில் இன்றும் உயிர்ப்போடு காண்போரையும், கேட்போரையும் பரவசப்படுத்துகின்ற ஒன்று என்று

சொன்னால், தென்னிந்தியாவின் கர்நாடக சங்கீதம் என்பதை யாரும் மறுக்க இயலாது. இசை, மனித குலத்திற்குக் கிடைத்த மகத்தான வரப்பிரசாதம். வாழ்க்கையின் அத்தனை நிலைகளிலும், அது இரண்டறக் கலந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. இசையில் எத்தனை வகை இருந்தாலும், அது நாடு, இனம், மொழி என எந்தப் பாகுபாடும் இல்லாமல் அனைவரையும் கவர்ந்து ஒருங்கிணைக்கும் சக்தி கொண்டதாக விளங்குகிறது.

மனம் மகிழ்ச்சியடைவதற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும், தெய்வ வழிபாட்டிற்கும், தேச பக்திக்கும், கொள்கை முழக்கத்திற்கும், மக்களின் மனங்களை இணைப்பதற்கும் ஒரு பாலமாகவே இசை பயன்பட்டு வருகிறது. அந்த இசையை பேணிப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல அயராது பாடுபடும் கலைஞர்களை கௌரவிக்கும், அப்பணியை சிறப்புடன் செய்யும் பெரியோர்களை பெருமைப்படுத்தும், ஒரு மிகச் சிறந்த மேடையாக ‘சென்னையில் திருவையாறு’ சங்கீத நாட்டிய விழா அமைத்திருப்பது பாராட்டுக்குரியது. அதனால் தான், ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மைல்களைக் கடந்து வேடந்தாங்கலை முற்றுகையிடும் பறவைகளைப் போல, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் இசை ரசிகர்களும், மார்கழி மாதத்தில் சென்னையை நோக்கி குவிந்து வருகிறார்கள்.

கர்நாடக இசை என்றால் அது நமக்கில்லை என காததூரம் சென்ற காலம் மலையேறி, இன்று வீட்டுக்கு வீடு தங்கள் குழந்தைகளை கர்நாடக சங்கீதப் பயிற்சியில் சேர்த்து விடுவதை பார்க்க முடிகிறது.

கர்நாடக இசை அல்லது கர்நாடக சங்கீதம் தென்னிந்திய இசை வடிவமாகும். உலகின் தொன்மையான இசை வடிவங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. இது தமிழ்நாட்டில் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது. ஏழிசை என்பது குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி மற்றும் தாரம் என அழைக்கப்பட்டதையே தமிழ் மொழியில் வடமொழிக் கலப்பு ஏற்பட்டபோது இந்த ஏழு இசைகளை ஸ்வரம் என்றனர்.

தியாகராஜ சுவாமிகள், முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் என்னும் மூவரும் கர்நாடக இசையில் மும்மூர்த்திகள் ஆவார்கள். இவர்கள் இயற்றிய ஆயிரக்கணக்கான பாடல்கள் இன்று வரை கர்நாடக இசையில் உயிர் நாடியாக உள்ளன. மேலும், முத்துத் தாண்டவர், அருணாச்சல கவிராயர், மாரிமுத்துப் பிள்ளை

என்னும் முப்பெரும் இசை அறிஞர்கள் சீர்காழியில் வாழ்ந்து தமிழ் கீர்த்தனைகளை சிறப்புற வளர்த்தனர்.

ஆரம்ப காலத்தில் திரைத் துறையில் பாடப்பட்ட பாடல்கள் அனைத்தும் கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்டே பாடப்பட்டது. ஆரம்ப காலத்தில் தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா போன்றவர்கள் பாடிய பாடல்கள் அனைத்தும் கர்நாடக இசையின் ராகங்களின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன.

பிற்காலத்தில் நமது புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய திரைப் படங்களில் பாடல்களுக்கு முக்கியத்துவம் அளித்தார்கள். அவரது பாடல்கள் பெரும்பாலும் கர்நாடக இசை ராகங்களின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களும் கர்நாடக இசையில் பற்று கொண்டவர் மற்றும் பரதக் கலையில் சிறந்த வல்லுநர் ஆவார்கள். இவர்கள் இருவரது ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் பல்வேறு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இசையின் மீது மிகுந்த பற்று இருந்தது. குறிப்பாக கர்நாடக இசை மீது அளவற்ற பிரியம் இருந்தது. இதனை கூறுகையில் எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் பிரபல கர்நாடக இசை வித்வான் திரு. பாலமுரளி கிருஷ்ணா அவர்களின் 75–வது பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவரை பாராட்டிப் பேசுகையில், அவர் கர்நாடக இசை உலகில் சாதித்த சாதனைக்காக, அவருக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட வேண்டும் என எடுத்துரைத்து பேசினார்கள். மேலும், தான் அவருடைய சீடராக பிறக்க வேண்டும் என்றும், அவரிடம் சங்கீதம் கற்றுக் கொண்டு, அவரிடமே சபாஷ் பெற வேண்டும் என்ற தனது ஆசையை அப்பொழுது வெளிப்படுத்தினார்கள். மேலும், இந்த நிகழ்ச்சியில், பாலமுரளி கிருஷ்ணா அவர்கள், கர்நாடக இசையில் தான் அமைத்த ஒரு புதிய ராகத்திற்கு ‘ஜெய ஜெய லலிதே’ என்றே மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரையை சூட்டினார்.

இன்று இந்நிகழ்ச்சியில் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்களின் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளதை எண்ணி, மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், எங்களுடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்காகவும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்காகவும் நூற்றுக்கணக்கான

எழுச்சி மிக்க திரை இசை பாடல்களை வழங்கியவர் என்பதால் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்படிப்பட்ட சந்தோஷமான வேளையில், ‘‘எம்.எஸ்.வி.’’ அவர்களைப் பற்றி எண்ணி வியப்படைகின்ற சில விஷயங்கள் என் நினைவுக்கு வருகின்றன.

- இசைத் துறையில் பல்வேறு பரிமாணங்களை உருவாக்கியவர்.
- எளிய மக்களும் ரசிக்கும் விதமாக மெல்லிசை வடிவத்தினை ஏற்படுத்தியவர்.
- எல்லா காலக் கட்டத்திற்கும், சூழ்நிலைக்கும், மன நிலைக்கும், உணர்விற்கும், சம்பவங்களுக்கும் ஏற்ப பாடல்களை வழங்கிய மாமனிதர்.
- காலங்கள் கடந்தும் வரலாற்றில் நிற்கும் அளவிற்கு பாடல்களை உருவாக்கி சாதனை படைத்தவர்.
- மகாகவி பாரதியாரின் பல பாடல்களுக்கு இசை வடிவம் கொடுத்தவர்.
- மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல்களில் 50 சதவீதத்திற்கும் மேல் இவருடைய இசை என்றால் மிகையாகாது.
- ஆயிரம் படங்களுக்கு மேல் இசையமைத்தது மட்டுமல்லாமல், நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடிய இசை அமைப்பாளர்.
- தமிழ்த் தாய் வாழ்த்து இவர் இசையமைப்பில் உருவானது.
- ஒரு திரை இசை அமைப்பாளருக்கான ரசிகர் மன்றம் அமைக்கப்பட்டது முதன்முதலில் மெல்லிசை மன்னருக்குத் தான்.
- பாமரர்கள், படித்தவர்கள், இசை அறிஞர்கள் என அனைவரின் ஒருமித்த அன்பிற்கும், பாராட்டிற்கும் உரியவர் மெல்லிசை சக்கரவர்த்தி எம்.எஸ்.வி. அவர்கள்.
- மெல்லிசை மன்னர், மெல்லிசை மாமன்னர், மெல்லிசை சக்கரவர்த்தி என்ற பட்டப் பெயர்களைத் தொடர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால் ‘‘திரை இசைச் சக்கரவர்த்தி’’ என்ற பட்டத்தைப் பெற்றவர்.
- மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மெல்லிசை மன்னரின் வாழ்நாள் சாதனையை பாராட்டும் விதமாக சென்னை நேரு உள் விளையாட்டரங்கத்தில் மாபெரும் விழா எடுத்து கௌரவப்படுத்தினார்கள்.

இந்த விழாவிற்கு வருகை தந்து சிறப்பு செய்து கொண்டிக்கின்ற மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய பத்மபூஷண் திருமதி. சரோஜா தேவி அவர்கள் புரட்சித் தலைவருடன் 26 படங்களில் நடித்தவர். இந்தியா முழுவதும் பல்வேறு மொழிப் படங்களில் நடித்து புகழ் பெற்றவர். மெல்லிசை மன்னர் இசை அமைத்தவற்றில் மட்டுமே 100 படங்களுக்கு மேல் நடித்த பெருமைக்குரியவர். இன்றும் உலக அளவில் ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்து நிலைத்து நிற்பவர் மரியாதைக்குரிய திருமதி. சரோஜாதேவி அவர்கள்.

தவில் இசை மேதை பத்மஸ்ரீ ஏ.கே.பழனிவேல் அவர்கள் இன்று இசை ஆழ்வார் விருது பெறுவதை நான் மனதார பாராட்டுகின்றேன். அவர் மேலும் உலக அளவில் சாதனைகள் படைத்து இசைத் துறைக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித்தர மனதார வாழ்த்துகிறேன்.

இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ‘‘இசைப் பல்கலைக்கழகம்’’ உருவாக்கி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்திருந்தார்கள்.

ஒரு இசைக் குழுவினராக லஷ்மன் ஸ்ருதி சகோதரர்கள் என்னை இந்த விழாவிற்கு அழைத்தபோது, இத்துறையை அரசு அங்கீகரித்த துறையாக அறிவிக்க வேண்டும் என்ற தங்களுடைய வேண்டுகோளை வைத்தார்கள். இந்த கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலிக்கும்என்பதை இந்த இனிய விழாவில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் மேடையில் இருக்கின்றவர்கள் எல்லாம் என்னைப் பற்றிப் பேசினார்கள். நாங்கள் எல்லாம் அரசியல் பொதுக் கூட்டத்திலே எங்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலே நாங்கள் பேசுவோம். ஆனால், இது பெரியோர், சான்றோர்கள் அமர்ந்த இடம். இந்த இடத்திலே நாங்கள் எழுதி வந்தது நிறைய இருந்தது, உங்களையெல்லாம் பார்த்த பிறகு அதையெல்லாம் தவிர்த்து, இந்த நிகழ்ச்சி ஒரு அற்புதமான நிகழ்ச்சி, இசைக்கு மயங்காதவர்கள் எவருமேயில்லை, இசை என்பது நம்முடைய மன ஓட்டத்திற்கு எல்லையே இல்லாமல் மனதில் ஓடிக்கொண்டிருப்பது. ஆகவே, அந்த இசை மழையை பொழிகின்ற நம்முடைய நண்பர்களுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், இசை ஜாம்பவான்கள், இசை விருந்தை உங்களுக்கு வழங்க இருக்கின்ற அவர்களுக்கும்,

அதை ரசித்துக் கேட்க இங்கே அமர்ந்திருக்கின்றவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ‘சென்னையில் திருவையாறு’ நிகழ்ச்சி வெள்ளி விழா கண்டு, பொன் விழா கண்டு நூற்றாண்டுகளைக் காண மனமார்ந்த, இதயப்பூர்வமான நல்வாழ்த்துக்களை இந்த நேரத்திலே தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி! வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**